1994 ஏப்ரல் 13]

275 —

கிருஷ்ணகிரி வட்டம், பெல்லராம் புள்ளி வேளாண்மைத் தொடக்க கிராம வங்கியை இரண்டாகப் பிரித்தல்.

20480*— *திரு. கே. முனிவெங்கடப்பன்:

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், பெல்லராம்பள்ளி வேளாண்மைத் தொடக்க கிராம வங்கியின் நிர்வாக எல்லை அதிகமாக உள்ளதால், அதை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பிரிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல திட்டங்களைக் கொண்டுவந்து, நல்ல ஆட்சியைச் செய்து வரும் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இந்த பெல்லராம்பள்ளி வேளாண்மை தொடக்க வங்கியானது 18 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கிய மிகப்பெரிய வேளாண்மை வங்கியாகும். அந்த வங்கிக்கு மக்கள் வரவேண்டுமென்று சொன்னால் அங்கிருந்து 36 கிலோ மீட்டர் தூரம் வரவேண்டியிருக்கிறது. ஏறக்குறைய 40 ஆயிரம் உறுப்பினர்கள் அந்த வங்கியில் இருக்கிறார்கள். மிகப் பரந்த அளவில் இருக்கிற அந்த வங்கியானது நல்லமுறையில் செயலாற்ற இன்னும் அதை 3 பிரிவுகளாகப் பிரிக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாக அங்கேயிருக்கிற மக்கள் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டாவது அதைப் பிரிப்பதற்கு ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், பெல்லராம்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி பாலக்குறி என்ற கிராமத்தில் செயல்படுகிறது. இந்த வங்கியினுடைய விவகார எல்லை அதாவது 'ஏரியா ஆப் ஆப்பரேஷன்' 14 கிராமங்களாக இருக்கின்றன. அந்தப்

பகுதியில் இருக்கிற விவசாயிகள் மழையை நம்பி விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். மிகக் குறைந்த அளவில் கிணற்றுப் பாசனம் இருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்தப் பகுதி மலையும், குன்றுகளும் அதிகமாக இருக்கிற பகுதியாகும். அதனால்தான் கடன் பெற்றவர்கள் கூட கடன் தொகையைக் குறிப்பிட்ட காலத்தில் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். இதன் பலனாக வங்கியின் தவணை தவறிய கடன் நிலுவை ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இந்த வங்கி 14 நியாயவிலைக் கடைகளை ஏற்கனவே நடத்திக் கொண்டிருக்கிறது. புதிதாக ஒரு வங்கியிலிருந்து இன்னொரு கிளையைப் பிரிக்க வேண்டுமென்று சொன்னாலோ, அல்லது புதிய வங்கியை உருவாக்க வேண்டுமென்று சொன்னாலோ, நாபார்டு கொடுத்திருக்கிற விதிமுறைகளின்படி ஏற்கனவே இருக்கிற வங்கி தன்னுடைய ஆள் திறனை இழக்கக்கூடாது என்று இருக்கிற காரணத்தால், ஏற்கனவே இந்த வங்கி நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கிற காரணத்தால், இதை இன்னொரு பிரிவாக தனியாக இயக்க முடியாது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல இந்த வங்கியை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று இந்த வங்கியினுடைய உறுப்பினர்களிடமிருந்தோ அல்லது பொதுமக்களிடமிருந்தோ அரசுக்கு இதுவரைக்கும் எந்தவிதமான கோரிக்கையும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வங்கியானது—16 கிராமங்கள் இல்லை,—18 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கிய மிகப்பெரிய வங்கியாகும். அங்கே இருக்கிற செயலாளரோ அங்கே இருக்கிற எழுத்தரோ விவசாயிகளை அணுகி நல்லமுறையில் அதை வசூல் செய்வதற்கு முடியவில்லை. ஏன் என்றால் மிகப்பெரிய பரந்த எல்லையைக் கொண்டிருக்கிறது. எந்தப் பக்கம் செல்ல வேண்டுமானாலும் 36 கிலோமீட்டர் செல்ல வேண்டும், ஆகவேதான் நல்லமுறையில் கடன் கொடுப்பதற்கும் முடியவில்லை; கொடுத்த கடனை வசூல் செய்வதற்கும் முடியவில்லை. ஆகவே, பெல்லராம்பள்ளியை தலைநகராகக் கொண்டு ஒரு பிரிவாகவும், கங்கனேரியை தலைநகராகக் கொண்டு ஒரு பிரிவாகவும், இப்படி 3 பிரிவுகளாகப் பிரித்தால், சிறிய சிறிய சங்கங்களாக இருக்கும்போது விவசாயிகளை எளிய முறையில் அவர்கள் அணுகி கொடுக்கப்பட்ட கடனை வசூல் செய்வதற்கும், மேலும் கடன் கொடுப்பதற்கும் — அதே மாதிரி அங்கே 6 நியாயவிலைக் கடைகள் இருக்கின்ற — அவைகளை நிர்வகிப்பதற்கும் சரியாக இருக்கும். ஆகவே, இது மறுபரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

1994 ஏப்ரல் 13]

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோடிமாரி, அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போது தொந்தரவு செய்யக் கூடாது. கேள்வி நேரத்தின்போது, பொதுவாக அமைச்சர்களிடம் போய் அவர்களைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று நான் அடிக்கடி சொல்கிறேன். நீங்கள் பதில் சொல்லிக்கொண்டு இருக்கிற அமைச்சரையே தொந்தரவு செய்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே அறிவித்து இருக்கிறேன். இந்த வங்கியை எந்தப் பிரிவாகவும் பிரிக்க முடியாது என்று. 'நபார்டு நிறுவனம்' வகுத்துள்ள நெறிமுறைகளின்படி ஒரு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, தன்னிறைவு பெற்ற வங்கியாகத் திகழ வேண்டும். அப்படித் திகழ வேண்டுமென்றால், குறைந்தபட்சம் ஆண்டுக்கு 10 இலட்சம் ரூபாய்க்குக் குறைவு இல்லாமல், குறுகிய காலக் கடன்கள் வழங்க வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறது. அந்த அடிப்படையில் இந்த வங்கியைப் பொறுத்தமட்டில், 1988-லிருந்து 1993 வரையில் 5.14 இலட்சத்துக்கு மேல் யாரும் இங்கே கடன் கேட்கவில்லை. எனவே, இந்தச் சூழ்நிலையில் புதிய ஒரு கிளையையோ அல்லது இருக்கின்ற வங்கியை இரண்டாகப் பிரிக்கின்ற நடவடிக்கைக்கோ இடமே இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 276, டாக்டர் மு. சீனியம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 277, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS

277—

பரங்கிப்பேட்டை ஒன்றியம், மிதிக்குடியில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தல்.

***22097** — செல்வி கோ. மல்லிகா:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், மிதிக்குடி கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?